பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்

RASI

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்.
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஐப்பசி மீ 12 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 16 ( 28 - 10 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 221

## செய்திச் சாரம்

### சேருவிலை எம்.பி. இராஜினமா!

கொழும்பு அக் 28

சேருவிலை எம்பி திரு. எஸ் லீலரத்ன நேற்றுத் தனது எம் பி பதவியை இராஜினமாச்செய்தார்.

இராஜினமாக கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் அவர் நேற்றுச் சமர்ப்பித்தார். (உ-ஐ)

### முத்திரைக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 28

யாழ். தபால் நிலையத்தில் மீண்டும் முத்திரைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து முத்திரைகள் வராததன் காரணமாகவே இங்கு பெறுமதி கூடிய முத்திரைகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது

இதேவேளை வான் கடித உறைகள் போதியளவு பெறக்கூடியதாக இருப்பதாக தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

### படகு விபத்து: 200 பயணிகளை காணவில்லை

டாக்கா, அக். 28

பங்களாதேஷில் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் குறைந்தது 200 பயணிகள் காணமற் போய் விட்டனர்.

நேற்று முன்தினம் தென் பகுதியில் உள்ள ஆறு ஒன்றில் இப்படகு கவிழ்ந்தது

ஆறு பேரின் சடலங்களே கண்டுபிடிக்கப்பட்டன. (ஓ-எ)

### சுண்டுக்குளியில் இளைஞர் கொலை!

யாழ்ப்பாணம் அக் 28

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

16 வயதுடைய துரைராசா சுந்தரம் என்ற இளைஞரே உயிரிழந்தவராவர். (ஓ-10-51)

### ஒஸி போட்டியிடுவது நிச்சயம்

கொழும்பு அக். 28

ஜனாதிபதித்தேர்தலில் திரு. ஒஸி அபயகுணவர்த்தனவை நிறுத்துவது என்று இலங்கை மக்கள் கட்சியின் மத்திய செயற் குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

விரைவில் நடைபெற உள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இம்முடிவைச் சமர்ப்பிப்பது எனவும்:-

ஐக்கிய சோஷலிசஅணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்குஇது பற்றி அறிவிப்பது எனவும் மத்திய செயற்குழு மேலும் தீர்மானித்தது. (உ-எ)

### இன்னும் முடிவில்லை

சென்னை, அக் 28

தமிழ்நாடுசட்டசபைக் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே, தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவதா என்பது பற்றி இந்திரா காங்கிரஸ் தீர்மானிக்கும்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லி திரும்பும் முன்னர் திருச்சியில் தெரிவித்தார். (உ-எ)

### பெற்றோர்கள் தயாரில்லை

கொழும்பு அக் 28

தென்பகுதியில் பாடசாலைகளை மீண்டும் திறக்கப் போவதாக நிர்வாகம் அறிவித்திருப்பினும், மாணவர்களை அனுப்ப பெற்றோர்கள் தயாராக இல்லை அறிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்குக் குழந்தைகளை அனுப்பிவிட்டு அவர்களின் பாதுகாப்பு பற்றி நாம் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது என்று பெற்றோர்கள் தெரிவித்துள்ளனராம். (உ-எ)

### பூதவுடல்கள் யாழ் வந்தன

வவுனியாவில் அகால மரணமான பிராந்திய சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு எஸ். எஸ். வசந்தநாதன், பொது சுகாதாரப் பரிசோதகர் தனபாலசிங்கம் ஆகியோரின் பூதவுடல்கள் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன

நாவலர் வீதியைச் சேர்ந்தவரான திரு. என். எஸ். வசந்தநாதனின் பூதவுடலுக்கு நேற்று யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் உட்பட பல ஊழியர்கள் அஞ்சலி செலுத்தினர். (ஓ-10)

### ஜே. வி. பி. பதில் இல்லை!

கொழும்பு அக் 28

நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, காபந்து அரசாங்கத்தின் மேற்பார்வையில் ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடத்த தாம் தயார் என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்திருந்தார் அல்லவா?

இந்த அறிவிப்பை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட பலஎதிர்க்கட்சித்தலைவர்களும் வரவேற்றுள்ளனர். ஆனால் ஜே. வி. பி. மட்டும் நேற்று இரவு வரை இது தொடர்பாக கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. [உ-எ]

### கரை ஒதுங்கிய மிருக உடல்கள்

காரைநகர் கடற்பகுதியில் உயிரிழந்து, துர்நாற்றம் வீசும் நிலையில் பல செம்மறி ஆடுகளின் உடல்களும் மற்றும் ஏராளமான பொருள்களும் கரை ஒதுங்கி இருக்கின்றன.

கரை ஒதுங்கிய பொருள்களில் தேயிலை, கோப்பி, மரக்கறி வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் அடங்கி இருந்தன.

# ஜே.வி.பி வன்செயலை கண்டிக்கிறார் அனுரா

## இந்தியப்படை வெளியேறினால் எல்லாம் முடிவுக்கு வருமாம்

கொழும்பு, அக்டோபர் 28

தென்பகுதித் தீவிரவாத அமைப்பான மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) இயக்கத்தின் வன்செயல் நடவடிக்கைகளை எதிர்க் கட்சித் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகருமான திரு. அநுரா பண்டாரநாயக்கா கண்டித்துள்ளார்.

எனினும், இந்தியப்படைகள் இலங்கையிலிருந்து வெளியேறியதும் இந்த வன்செயல்கள் முடிவுக்குவந்துவிடும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்:

பிரிட்டனில் வெளிவரும் 'தி இகனமிஸ்ட்' சஞ்சிகையின் அக்டோபர் மாத இதழுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்

அண்மையில் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த திரு பண்டாரநாயக்கா அங்கு இந்த இதழுக்குப் பேட்டியளித்தார்

தமது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பெரும்பாலான இலங்கை மக்கள் இந்தியர்கள் மீது அதிருப்தியடைந்திருக்கின்றனர்.

எனது கருத்தின் பிரகாரம், தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்த்துச் சமாளிப்பதற்கு இலங்கை இராணுவம் முழுத்திறமையும பெற்றிருக்கிறது.

இந்தியர்கள் கடந்த வருடம் இலங்கைக்கு வருவதற்கு முன் இலங்கையின் சொந்தப் படைகள் சரியாகவே செயற்பட்டுவந்தன

இந்தியர்கள் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை எங்கள் கட்சிக்கு வாக்குகளைப் பெற்றுத தரும் வாய்ப்பை ஏற்படுததியிருக்கிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஜனாதிபதி தேர்தலில் பெருவெற்றியை ஈட்டிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி




உவர் உத்தமர் இன்னும் எத்தனை நாளைக்கு உந்தக் கதிரையில இருந்து கூத்தடிக்கப் போறார்...!

## நெடுந்தீவில் படையினர் தேடுதல்

நெடுந்தீவுப் பகுதியில் நேற்று முதல் தொடர்ந்து தேடுதல் வேட்டை இடம்பெற்றுவருகிறது

நேற்றுக் காலை பத்து ஹெலிகொப்டர்களிலும் கடற்படைப் படகுகளிலும் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த சுமார் நானூற்றுக்கும் அதிகமான ஜவான்கள் நெடுந்தீவில் வந்து கரை இறங்கினார்கள்.

நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடக்கியிருக்கும் அமைதிப்படையினர் பொதுமக்களைக் குறிப்பிட்ட இடங்களுக்கு வருமாறு வேண்டிக் கொண்டனர்.

இதனால் நெடுந்தீவுப் படகுச் சேவை நேற்று இடம்பெறவில்லை. (ஓ-111)

## கிளிநொச்சியில் மறியல் போராட்டம்

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனையின் முன்னால் கடந்த புதன் கிழமை சுமார் 300 பேர் மறியலபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

1983 இல் பல்லவராயன்கட்டு ஜெயபுரம் பகுதியில் குடியேற்றப்பட்டவர்களே மறியலில் ஈடுபட்டனர்

அரச மானியங்களும். நெற் காணியும் உறுதியளிக்கப்பட்ட படி வழங்கப்படாததே இந் நடவடிக்கைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது (ஓ-ரி)

## எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட பிக்குமார் முஸ்தீபு

கொழும்பு, அக். 28

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவும், இந்திய அமைதிப்படையை திருப்பி அனுப்பவும் கோரி பெரிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட தென்பகுதி பிக்குமார்கள் ஆயத்தமாகி வருவதாகத் தெரிகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி கொழும்பு வித்தியோதய பிரிவேனாவில் நடைபெறும் இலங்கை தேசிய பிக்குமார் சம்மேளனக் கூட்டத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

இக் கூட்டத்தை ருகுணு பல்கலைக்கழக வேந்தர் வண பரவெஹர பன்னநந்த நாயக்க தேரர். வண. இத்திப்பன தம்மலங்கார தேரர் வண அத்தன்கன ரதனபால தேரர். வண. கல்கமுவ தம்மிஸ்ஸர தேரர், வண மீமனக்கலவெளிய தம்மவிஜித தேரர் ஆகியோர் அழைத்துள்ளனர்.

நாட்டின் பல பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி பிரசைகள்குழு தலைவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், அக். 28

தென்மராட்சி பிரசைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி திரு. வீ. இராஜசங்கரி கடந்த புதன்கிழமை இரவு சாவகச்சேரியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

சாவகச்சேரியில் உள்ள அவரது வீட்டுக்கு இரவு நேரத்தில் வந்த சிலர் அவரை விசாரணைக்காகக் கூட்டிச் சென்றதாகவும் —

பின்னர் நேற்றுக்காலை சாவகச்சேரி தபால் நிலையச் சந்தியில் சூட்டுக் காயங்களுடன் அவரது சடலம் கண்டுபிடிக்கப் பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம் அக் 28

தென்மராட்சி பிரசைகள் குழுத்தலைவர் திரு. வீ. இராஜசங்கரி சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து தென்மராட்சி மாணவர் ஒருங்கமைப்புக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

இத்தகைய செயல்கள் தொடர்ந்தும் இடம் பெறுவதை தமிழீழ மக்கள் அனைவரும்ஒன்றுபட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

28 - 10 - 1988
ஐப்பசி 12
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6 03முதல் 7-33வரை
ராகுகாலம்:-
10-33முதல் 12-03வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பல்கலைக்கழக மாணவர் கொலை: ஊவா மாகாணசபை முதல்வரின் மகன் கைது!

ஊவா மாகாணசபை முதலமைச்சர் திரு. ஜி. வி. புஞ்சிநிலமேயின் மகன் திரு. சுஸந்த புஞ்சிநிலமே நேற்று பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இரத்தினபுரியில் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் கொலையுண்ட சம்பவத்தில் இவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றசந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது. (உ-ஐ)

## பொருளாதார முயற்சிக்கான நிவாரணக் கொடுப்பனவு

### வழங்கப்படும் திகதிகள் அறிவிப்பு

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதிகள் தமது பொருளாதார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன

யாழ். அரசாங்க அதிபர் திரு.வை மு. பஞ்சலிங்கம் இந்தத் திகதிகளை அறிவித்துள்ளார்.

ஏப்ரல், மே மாதங்களில் நாடு திரும்பியவர்களுக்கு இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமையும்—

ஜூன் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நாடு திரும்பியவர்களுக்கு இம்மாதம் 31ம் திகதி திங்கட்கிழமையும் யாழ் செயலகத்தில் வைத்து காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்

இந்தக் கொடுப்பனவிற்கு விண்ணப்பித்தவர்கள் இலங்கை—இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அகதிகள்பதிவு அட்டையுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் ஒரு ரூபா பெறுமதியான முத்திரையுடனும் குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு சகல கட்சிகளையும் சேர்த்து காபந்து அரசு அமைக்குக!

### வன்செயலை நிறுத்த அதுதான்வழி என்கிறார் சிறிமா

கொழும்பு, அக். 28

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் காபந்து அரசு அமைக்கப்பட வேண்டும் அப்போதுதான் தேர்தலை நடத்தக் கூடிய உகந்த சூழ்நிலை ஏற்படும் இது ஒன்றுதான் வன்செயலை நிறுத்தும்.

—சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்படித்தெரிவித்திருக்கிறார். நேற்று முன்தினம் பத்திரிகை அறிக்கை ஒன்றை அவர் விடுத்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சுதந்திரமான நீதியான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை அரசு உறுதி செய்ய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர்.மீது முழு நம்பிக்கை உண்டு என்கிறார் ராஜீவ்

புதுக்கோட்டை அக் 28

ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

—இப்படிஇந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி நேற்றுச் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

நான்கு நாள் தமிழகப் பயணத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி திரும்பும் முனனர் செய்தியாளர்களை அவர் சந்தித்தார்.

அமைதிஒப்பந்தத்தை ரத்துச் செய்யப் போவதாகச் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அமைதி ஒப்பந்தத்துக்கு பதிலாக நட்புறவு உடன்படிக்கை செய்துகொள்ளப் போவதாகப் பிரதமர் பிரேமதாசாவும் கூறி வருகின்றனரே!- என்று பிரதமர் காந்தியிடம் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்குப் பதிலளித்துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு கச்சேரி உடைக்கப்பட்டு கொள்ளை

ஒட்டுசுட்டான், அக் 28

முல்லைத்தீவு கச்சேரிக்குள் கொள்ளையர்கள் புகுந்து அலுவலகங்களை உடைத்து தட்டச்சுகள், தொலைபேசிகள் பதிவு ஏடுகள் என்பனவற்றை களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கச்சேரி செயலிழந்து இருந்த வேளையிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றதாக அறியவருகிறது

பதிவு ஏடுகள் பிரிவு, திட்டமிடல் அலுவலகம் ஆகிய கிளைகளுக்குள் இருந்த அலுமாரிகள், தளபாடங்கள் உடைத்து நொருக்கப்பட்டிருக்கின்றன. (ஓ-113)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


விற்பனை

குளிர்சாதனப் பெட்டி, ஹேரால் செற் Casio Musical Instrument, Pan, காரியாலய மேசை, Cooler, Floor Polisher, கசற்றேடியோ, விருந்தை செற்றி, T. V. Stand மற்றும் பலவித பாவித்த பொருட்களும் உடன் விற்பனைக்குண்டு. No. 191, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோயில் முன்பாக. (7479)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட சழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## SALE

Video cameras & Production Mixers for Sale JVC (GXN 70E) National Fio (Genlock) sony 3000- Sun Suie special effect production mixer National MX 10- mixer For futher details contact: Sun Video Complex, School Lane, Kondavil West, Kondavil (7607)

## கோழிக்குஞ்சு விற்பனை

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் 28-10-88 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7250)

கோல்டன் ரொமற், கைலேன், கைறெக்ஸ் பேடு சேவல், புறயிலர், ஒருமாதப் பிரா அனைத்தும் சலுகையிலும் 100க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அதிக சலுகையும். ஸ்ரீ சாயி துர்க்கா என்றப்பிறைஸ், சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு (7624)

BAIRAHA FARMS HYBRO, CHRISTOMBU FARM HUBBARD. புறொயிலர் குஞ்சுகள் 100க்கு மேல் விலை 16/-, தேவையான தொகை முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7441)

பிறியா இன ஒருநாள் முட்டையிடும் வெள்ளை, சிவப்பு கோழிக் குஞ்சுகளும், புரோயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 22-10-88 முதல் விநியோகிக்கிறோம். தேவைப்படுவோர் உடன் பெற்றுக்கொள்ளலாம். M.G.M. Forage Stores No: 208, 1st Cross St. Jaffna. (7428)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Christumbu Indian River Broiler குஞ்சுகள் 28 10 88 இலும் Hyline கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 1-11-88 இலும் தாராக் குஞ்சு 30-12 88 லும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: A J.S Farm 45, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம், 'லீலாபதி' கண்டி வீதி, மிருசுவில் (7464)

Hisex Golden Comet பிறவுண் சேவற் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளைகறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (7249)

## ஆண்டு 11 இலத்திரனியல்

திருத்திய இரண்டாம் பதிப்பு இலத்திரனியல் புத்தகம் முழு விபரங்களையும் உள்ளடக்கி, வினா-விடையுடன் கூடியதாக விற்பனையாகிறது. விநியோகஸ்தர்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்நகர். [7429]

## தவறிவிட்டது

கோப்பாய் வடக்கு மார்க்கம்புரையை சேர்ந்த ஆனந்தராசன் செல்லையா என்பவரின் அடையாள அட்டையும், வலி கிழக்கு (தெ.ப.) ப. நோ. கூட்டுறவு சங்க அடையாள அட்டை கோப்பாய்ச் சந்திக்கும் இராஜவீதிக்கும் இடையில் 26-10-88 தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் மேல் வரும் முகவரிக்கு தரவும். (7477)

செல்லமுத்து பரமேஸ்வரி இல. 637120670V உடுவில் தெற்கு பாலாவோடை ஆகிய எனது அடையாள அட்டை சுன்னாகத்திற்கும் இணுவிலுக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7622)

## தவறிவிட்டது

மகேஸ்வரி துரைரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டையும், பாஸ்போட்டும் முருகண்டிக்கும் பழைய முருகண்டிக்கும் இடையில் 25-10-88 அன்று தவறிவிட்டது. இதை கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி பவித்திரா ஹோட்டலில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (7483)

தேவராஜ் பொன்னம்பலம் ஆகிய எனது அடையாள அட்டை இல: 493132350V யாழ்ப்பாணம் Town இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7469)

## வீடு வாடகைக்கு

மாநகர சபை எல்லைக்குள் மூன்று அறைகளுடன் சகல வசதிகளும் உள்ள வீடு உடனே வாடகைக்கு உண்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 3, C/o உதயன். (7468)

## கண்டெடுக்கப்பட்டது

இரணைதீவுக் கடலில் கண்டெடுக்கப்பட்ட யமஹா 8 H P. வெளியிணை இயந்திரம் ஒன்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளுடன் வரவும். (7621)

## கைலாச பிள்ளையார் கோவில் இன்று

மாலை 3 00 மணிக்கு விசேஷ அபிஷேகம் மாலை 4-00 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை. அதைத் தொடர்ந்து யானை தரிசனம் அற்புதக் காட்சி. மண்டலாபிஷேகம் 44 ஆவது தினமான தினம் — பிள்ளையாரின் அடியான். (7463)

## பாலர் கலைப் போட்டி

பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர் கற்பிக்கும் பாலர்கள் பங்கு பற்றலாம். விண்ணப்ப முடிவு திகதி 1988-10-30 விபரங்களுக்கு நேரில் வருக. பாலர் ஆசிரியர் சங்கம், 42 பிரப்பங்குளம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (7619)

## விமான ரிக்கட்

விமான ரிக்கட் குறைந்த விலையில் தொடர்பு Dilka Ticketing Service Studio Dilka Bldg Bus Stand Jaffna. (7243)

## பொது அறிவுப் போட்டி 01

1988-10-30 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு பொது அறிவு எழுத்துப்போட்டி நடைபெறும். 40 நிமிடப் பரீட்சை 3 பணப்பரிசில்கள். 15 வயதுக்கு மேற்பட்டோர் 1988-10-29 மு ப 11-00 மணிக்குள் நேரில் விண்ணப்பிக்குக. கட்டணம் 10/- அன்பு கல்வி நிறுவனம், 42, பிரப்பங்குளம்ஒழுங்கை, யாழ்ப்பாணம். (7618)

## வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புது வீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' சுணில்). (6980)

## வகுப்புக்கள்

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

## A/L 89 இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 29-10-88 சனி 3 15 p.m (சனி ஞாயிறு 3 15 p m- 5 45 p m) (7605)

## English Teachers Exam Classes

சுன்னாகத்திலும் தெல்லிப்பளையிலும் 5-11 88 ஆரம்பிக்கப்படும். கொழும்பிலும் பிரபல கல்லூரிகளிலும் ஆங்கிலம் 30 ஆண்டுகளாக கற்பித்தவர். 30மணி பாடநேரத்தில் பாடத்திட்டம் முடிவடையும். பலன் அடைவது நிச்சயம். தொடர்பு: கணேசன் இளைப்பாறிய ஆசிரியர்), விங்க் (Vink) ஒழுங்கை, அளவெட்டி வடக்கு. (7623)

117 ஆவது தென் இந்திய யாத்திரையும்
மார்கழி மாத திருவாதிரை தினத்தில சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தில் ஆருத்ரா தரிசனமும்
ஆரம்பம்:- 7-12-88 முடிவு:- 27-12-88
யாத்திரைக் கட்டணம் ரூபா 3950/-
(இலங்கை - இந்தியப் பிரயாணச் செலவும் இதர செலவுகளும் தனி)
விபரங்கட்கு:-
விநாயகா ரூர்ஸ்
(அரசாங்கப் பதிவு பெற்றது - 7753)
அதிபர் அ. லி. அருணாசலம்
இராஜநாயகி தியேட்டர், காங்கேசன்துறை, நாகம்ஸ் சினிமா காம்பிளக்ஸ், சுன்னாகம்
திரு. அரு. சந்திரமோகன், 18, ஸ்டேசன்றோட். வெள்ளவத்தை. (7567)

சாவகச்சேரியில்
Computer Programming and Data Processing in
BASIC LANGUAGE
காலம்: 3 மாதம்  Fees: 1250/-
தகைமை - G C E (O/L)
ஆரம்பம்:- 03 - 11 - 88  9.30 a.m
ABLE TECHNICAL STUDIES
SCIENCE CENTRE
Post Office Road, CHAVAKACHCHERI (7562)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்
உஷா சினிமா
(1) பாண்டியராஜனின்
ஜாடிக்கேத்த மூடி
(ஒரிஜினல்)
(2) அர்ஜுன் - பானுசந்தர் K R. விஜயா நடித்த
எடுத்த சபதம் முடிப்பேன்
(ஒரிஜினல்)
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7485)


## வீட்டு தோட்டப் போட்டி

சங்கானை, அக். 28

யாழ்மாவட்ட சமநலச் சேவைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் 1988/89 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிப் பதிவுக்கான இறுதித் தினம் 30-11-88 புதன்கிழமையாகும்.

சமநலச்சேவை நிலைய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இது பற்றிய மேலதிக விவரங்களை அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது (ச -29)


பிரயாண ஒழுங்குகள்
GOLDEN TRAVELS & TOURS
கப்பலில் வேலை வாய்ப்பு:
சம்பளம்: 500 U.S. Dollar
ஒப்பந்தம்: 1 வருடம்.
(இக்கப்பல் கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இலண்டன் ஆகிய நாடுகளில் தரித்துச் செல்லும்.)
சவூதி அரேபியா-S.O.M.C.
University Cleaners 350+100
Hospital Cleaners 350+100
ஒப்பந்தம்: 3 வருடம்.
குவைத்:
ஆஸ்பத்திரி கிளினேர்ஸ்: 35 டினர்
வீதிச் சுத்திகரிப்பாளர்.
(வயது 18க்கு மேல்)
தொடர்பு:
கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
குப்பிளான்  வல்வெட்டி (C 688)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





பரமேஸ்வரன் சரோஜினிதேவி
ஆண்டவன் படைப்பு: 11 - 03 - 1945

தம்பையா குகநேசன்
ஆண்டவன் படைப்பு: 04 - 09 - 1960

அழிப்பு: 09 - 11 - 87

ஓராண்டு முடிந்ததம்மா
எம்மைவிட்டு நீ பிரிந்து
ஆறாத துன்பத்தால் நினைந்து
நினைந்து அழுகின்றோம்
ஆனாலும் உங்கள் அன்புமுகம்
எங்கள் நெஞ்சில்
நிலைத்து நிற்கும்.

மகன், மகள், பேரன், சகோதரர்கள், மருமக்கள்.

ஆண்டொன்று சென்றதையா
உங்கள் அன்புருவம் மறையவில்லை
உமது நினைவிலா நாளில்லை
எமதுயர் ஆறுதையா.
உமதுருவம் எம்நெஞ்சில்
என்றென்றும்
நிலைத்து நிற்கும்.

மனைவி, மகன், தந்தை, தாய், சகோதரர்கள், பேரனர்.

(7566)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



வேங்கை மேஜர் நரேன்
(நல்லநாதன் ஜனார்த்தனன்)
மண்ணில்: 24 - 11 - 1963  சொர்க்கம்: 28 - 04 - 1988

ஆண்டைந்தாய்க் களம் கண்டாய்
அருயிரை துச்சம் என மதித்தாய்
வீரமொரு சுவர்க்கத்தின் மகுடஞ்சூடி
வீற்றிருந்து சமிக்கின்றாயா நண்பனே.

நண்பன்.
யாழ்ப்பாணம். (7486)

## ஓராண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி மார்க்கண்டு
மண்ணில்: 28-10 1912  விண்ணில்: 23-10 1987
திதி: 28-10-1988

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்மிடம் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் வழிநடத்தி எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! ஓராண்டு பூர்த்தியாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

399, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (7481)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள்!

"நெஸ்டம் அழகான இல்லம்"

போட்டியின் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகள் இதோ!


## முந்திக்கொண்ட வெற்றியாளர்கள்

### 3 ஆவது சிட்டிழுப்பு

★ நூருல் ரமீசா பாருக் 60, தெய்யன்னவல கண்டி
★ சித்ராணி குசும் பெரேரா 432, செஸ்பாவ வீதி பொரளஸ்கமுவ
★ சாந்தி ரணசிங்க 38/9, ரெயில்வே வீதி கிருலப்பலனே கொழும்பு-5
★ உமர் ஹாஷிம் 28, நாலந்த பிளேஸ் கொழும்பு-10
★ மானெல் பத்திரண 423, ரயில் நிலையம் முன் பட்டுவத்தை ராகம
★ இந்திரா நத்தானியேல்ஸ் பேர்பி ஹவுஸ் கோலே வீதி பொல்காவலை
★ சிறியலதா வீதிசிங்க 42/16 மத வெலிக்கடை வீதி ராஜகிரிய
★ ஷமிஷ்த்ரா சொய்ஸா 25 1/1, அலெக்சாந்திரா வீதி கொழும்பு-6
★ பி. ஜி எஸ். ரங்கலால் 60/500, ருவன்புர அக்கோண அங்கொடை
★ நிரஞ்சலீ பெரேரா 'தில்ருக்ஷான்' 13சி, மகாவத்தை வெலிசறை ராகம
★ ஷீலா பிரான்சிஸ்கஸ் 8, சென். லோரன்ஸ் வீதி கொழும்பு 6
★ ஏ. எம். டி எஸ். ஹேமலதா 111/ஈ, புருழுக் வத்தை ஹேவாகம கடுவல
★ ஆன் டயஸ் இல. 8, பாடசாலை ஒழுங்கை (ஸ்டேஷன் வீதியிலிருந்து) தெஹிவளை
★ நிரோஷா ஷியாமளி 46/3, வெஹரகந்த வீதி பத்தேகம பிற்றகோட்டே
★ டபிள்யூ. எம். சுமனாவதி மெனிக்கே 'மெத்வாச' கலயாய பன்னல
★ ரமிகா ஜயமஹா 102, சென் மேரீஸ் வீதி மட்டக்குளி கொழும்பு-15
★ பெனிட்டா லியனாராச்சி புனித திருக்குடும்பக் கன்னியர்மடம் பலம்பலப்பிட்டி கொழும்பு-4
★ மிஷேல் நுகேரா 57/10பி, நிமலமரியா மாவத்தை ஹெந்தலை வத்தளை
★ கிறஹம் ஜெரமி இல. 71, இரண்டாம் ஒழுங்கை இரத்மலானை
★ ஜுவானிட்டா அருளானந்தம் 35/1 ஹொட்டேல் வீதி கல்கிசை
★ அஹமட் நதீம் மஜீத் 22ஏ, இன்ரியம் வீதி தெஹிவளை
★ குஷாந்த எஸ் அக்குரெட்டிய 99/1, பொரம்ப அம்பலாங்கொடை
★ நிரான் தனுஷ வர்ணதல இல. 275, தனுவ கொட்டுவ கொச்சிக்கடை
★ மைக் நாணயக்கார 3/4, 1ஆம் ஒழுங்கை கல்பொத்த வீதி நாவலை ராஜகிரிய
★ ஷிரான் பிரந்த 36/12, ஹஜ்ஜி பாத்திமா கார்டின் மக்கொல
★ அஹமட் இஸ்மைல் 21, தலப்பிட்டிய வீதி காலி
★ சதுரங்க தர்மவர்தன 198, திருகோணமலை வீதி கண்டி
★ ஹாசீஸ் வஹீட் 47/1, லெவிஸ் பீரிஸ் மாவத்தை கண்டி
★ சயீட் ஹிவ்ராஸ் மே/பா. திருமதி மஸீனா உறியைத்துல்லா 'வெள்ளை மாளிகை' 20, ஸ்டேல் வீதி புத்தளம்
★ டி. திலினி அனுருதிக்கா பெரேரா 598, அனுத்மாவத்தை வீதி கொழும்பு-15
★ மனோஜி எஸ் மென்டிஸ் 282, ராவத்தாவத்தை மொறட்டுவை
★ ஆர். ஷான் தஸநாயக்க 26, கிங்ஸ் வீதி அரச அதிபர் பங்களா பதுளை
★ பிரசாத் பந்துல பிரேமகுமார ஸ்ரீ சோமானந்த மாவத்தை அங்கமுவ பாதுக்கை
★ எவ் சல்மா நஸார் இல 12, 36ஆம் ஒழுங்கை வெள்ளவத்தை
★ சுரங்கா எஸ். ஹெட்டியாராச்சி இல. 17/1, கல்பனா ஒழுங்கை வத்தளை
★ பூர்ணிமா ஜயசிங்க 14, கோதமி மாவத்தை கல்கிசை
★ எம். ரமீஸ் சமீம் இல. 9, டிக்மன்ஸ் வீதி கொழும்பு-5
★ ஈ. ஜே கே. பி. நுவங்கா சண்டிமாலா நந்தசிறி அரிசி ஆலை ராஜ-எல வீதி மின்னேரிய
★ எம். எம். ஷிஹார் அஹமட் இல. 205, கல்பொக்க வீதி வெலிகம
★ ஜி. தயான் சானக பெரேரா இல. 10, 'மானெல்' மத வெலிக்கடை வீதி ராஜகிரிய
★ அனுரா கல்பனா 195/12, பொலிஸ் விடுதிகள் வதி நியூ டவுன் அம்பாறை
★ நட்ரா இப்றாஹிம் 22, சார்லிமன்ட் வீதி கொழும்பு-6
★ சானக பெரேரா 'சிரி செவன' கோன கம்பொல வீதி பிலப்பிட்டிய களனி
★ சிறியலதா விக்தாரணகே 37/6, டெம்பிள் வீதி கொழும்பு-10
★ ஷஸ்னியா சைதீன் 20, காஸில் ஒழுங்கை கொழும்பு-10
★ ரோஹான் குணதிலக இல 115, கம்பல் பிளேஸ் கொழும்பு-10
★ தினுஷ பொர்ணாண்டோ 1/1, லும்பினி அவெனியூ இரத்மலானை
★ ஸ்ரீநாத் சொய்ஸா 32ஏ, சேர் மொஹமட் மாக்கான் மாக்கார் மாவத்தை கொழும்பு-3
★ ரிஷானி விக்கிரமசிங்க இல 24, மெதகெதர வீதி மத்துகம
★ சி வை. எஸ் பஸ்நாயக்க 61, சதாசிறிபுர ஒருவலை அத்துருகிரிய
★ சுமுது வீரசேகர மே/பா சிறிபால வீரசேகர இல. 19, மத்திய வீடமைப்புத் திட்டம் கெரவலப்பிட்டிய வீதி ஹெந்தலை வத்தளை
★ ஸெயினுப் சலீம் 11ஏ, விஜயமங்களாராம குறுக்கு வீதி கொஹுவலை
★ சியான் பெரேரா 38/1, சமுத்திராதேவி மாவத்தை அத்துள் கோட்டே
★ கே. விமலசேன 30/2, வூட்வேர்ட் வீதி காலி
★ கே சி. விஜேசேகர இல 587, மெயின் வீதி பிற்றகோட்டே கோட்டே
★ ஹிஷாம் ஸாருக் 35 மாதங்காவத்தை ஒழுங்கை வெள்ளவத்தை
★ ஈ கருணாரத்ன 49ஏ, வூட்லண்ட் அவெனியூ கொஹுவலை
★ டில்ருக்ஷி ரணசிங்க 10/டி/4, வீடமைப்புத் திட்டம் ரத்தொளுகம
★ மரியம் ஆசீர்வாதம் 21/6 முதலாம் ஒழுங்கை கிருலப்பனை கொழும்பு-5
★ அஞ்சலி தளையசிங்கம் 70/1, பீட்டர்ஸன் ஒழுங்கை கொழும்பு-6
★ பத்மா காந்தி விஜேசூரிய இல. 144, கொச்சிக்கடை வீதி ஹல்பே கட்டான
★ எம். டி. சோமசிரி 328, தம்போவில பிலியந்தலை
★ லசித்த கருணாரத்ன 214, காலி வீதி பாணந்துறை
★ ஆஷா லெனெற ஜேமிசன் 738, திருகோணமலை வீதி மந்தம்தாவல மாத்தளை
★ சந்தயா காந்தி கொந்தாகொட உப தபால் நிலையம் தங்கெதற காலி
★ பிரான்சிஸ் பெர்னாண்டோ இல. 9, இரண்டாம் குறுக்குத் தெரு நீர்கொழும்பு
★ ஆர். ஏ. சிலாவதி 166/8ஏ, எல்விற்றிகல மாவத்தை கொழும்பு 8
★ சி. சுப்பையா 93, வாசல வீதி கொழும்பு-13
★ ஜனத் சித்ரால் பெர்ணாண்டோ இல 105, மெயின் வீதி வென்னப்புவ
★ தயா இந்திராணி ஒக. சி. 63, கொஹோம்பன அம்பாறை
★ ஜி. சாந்தநாதன் 81/6, இசிப்பத்தன மாவத்தை கொழும்பு-5
★ சித்ரா அமரசிங்க 17, விஜயாராம வீதி கங்கொடவில நுகேகொடை
★ சந்தியா ஹே ஹினி பெரேரா இல. 4, வலது சேர்க்கியூலர் வீதி ஜயந்திபுர பத்தரமுல்லை
★ ஏ. ரி குணதாச இல. 3, 4 ஆம் ஒழுங்கை கொஸ்வத்தை வீதி நாவலை ராஜகிரிய
★ பத்மினி விமலசிறி 10, கொஸ்வத்தை வீதி நாவலை ராஜகிரிய
★ கே. பி. நீத்தா நந்தினி ரி/1, சேபாலிஸ் வீதி இங்கினியாகல
★ டோன் பெரைரா ஏ 15 பி/ சி3/ 7, ரன்பொக்குனகம நித்தம்புவ
★ பி. எச். கொன்சால்வர் 4, கவுடர் பிளேஸ் ஸ்ரீ சரணங்கர வீதி தெஹிவளை
★ ஹேமமாலி வீரசூரிய 'திலக நிவாச' கஹத்தகொட பண்டாரகம வீதியகொட
★ ஜக்குலீன் கோல்மேயர் 22, ஸ்ரீ விக்கிரம அவெனியூ வத்தளை
★ செல்வி பொல்லியானா கிறே 26 ஏ, கிருலப்பனை அவெனியூ கொழும்பு-5
★ மகிந்த கூரே 53 தஹம் மாவத்தை கல்தேமுல்ல மொறட்டுவை
★ எஸ். பி. ஜயதிலக இல. 1, 33 ஆம் ஒழுங்கை பகத்தலை வீதியிலிருந்து கொழும்பு-3
★ பஸீலியா பிர்டாவுஸி 7/1, தர்கா வீதி சீனன் கோட்டை பேருவளை
★ உதயா இந்துனில் முத்துதந்திரி 158, தர்மாசோம மாவத்தை லேவல்ல கண்டி
★ சேதகி சிவந்திகா விஜேக்கோன் 852/44, சுசிதபுர தலங்கம வடக்கு மாலபே
★ ஈ. எம். நந்தசேன இந்துரான வஹக்கர
★ திருமதி இந்திராணி சேனாநாயக்க 77, பொல்ஹேன்கொட வெல்லவெகதற
★ வை. வீரசேகர 93/4, ராகம வீதி கடவத்தை
★ சந்தியா பெரேரா 21, தே. வீ. திட்டம் கிரிபத்கொட களனி
★ ஹரீன் இஷாந்த ஸ்ரெம்போ 33/5, சென். அந்தனீஸ் வீதி கடலான மொறட்டுவை
★ எல். டி. எஸ். டபிளியூ திஸாநாயக்க 7/4, ஸ்ரீ வஜிரவான்ச மாவத்தை ஒபயசேகரபுர ராஜகிரிய
★ மனோஜ் ஜயசிங்க இல. 6, முதலாம் ஒழுங்கை ஹேருப்பல கண்டி
★ வொரல் மிச்செம் பிராங்கி 6, சமகி மாவத்தை கௌதான வீதி தெஹிவளை
★ எச். எல். தலதா மார்கரட் டி சில்வா துஷாரா கோதாவுட கொட்டகொட
★ தப்ரிஸ் பைஸீன் 68, சுவர்ண வீதி கொழும்பு-6
★ குமுது பிரபா லக்மாலி 417, மகர நுகேகொடை கடவத்தை
★ சோமா விதானாராச்சி 'ஜயசிறி' புழுகஹமுல்லை மினுவங்கொடை
★ நந்தித மென்டிஸ் 463/21, கொழும்பு வீதி நீர்கொழும்பு
★ செல்வி கொரீன் டெக்கர் 27, வொக்ஸோல் ஒழுங்கை கொழும்பு-2

Nestum உங்கள் நாளை ஆரம்பிக்க ஆரோக்கியமான வழி!

## நெடுந்தீவு மீனவர்களுக்கு புதிய குடியேற்றத்திட்டம்

நெடுந்தீவு, அக். 28

நெடுந்தீவு மீனவர்களுக்குப் புதிய குடியேற்றத்திட்டம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக பிரஜைகள் குழு, நெடுந்தீவு முன்னேற்றக் கழகம், நெடுந்தீவு பல. நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் ஆகியவர்களுடன் மீனவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர்.

தெற்குக் கடற்கரைப் பகுதியான குடாக்கண்ணு என்ற இடத்தில் இந்தப் புதிய திட்டத்தை ஏற்படுத்துவது குறித்து பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. அ. வெ. அரியநாயகம் கூ. சங்கத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் ஆகியோர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். (ச-111

## இன்னும் நிவாரணம் இல்லை

கரவெட்டி, அக். 28

வடமராட்சியில் ஒபரேஷன் லிபரேஷனின் போது உயிரிழந்தவர்களுக்கு இதுவரை எது வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொதுஸ்தாபனங்கள் கவலை கொண்டுள்ளன. (இ-70)

## வர்த்தமானி விளம்பர குளறுபடியால் குழப்பம்

யாழ்ப்பாணம், அக் 28

இலங்கை அதிபர் சேவை 1, 2, 3, தரத்திலுள்ளவர்களுக்கான வினைத் திறன் காண்தடைப் பரீட்சை சம்பந்தமாக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தில் சில குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் விண்ணப்பதாரர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப பரீட்சைக்கான விண்ணப்பம் கோரும் விளம்பரம் 30-9-88 திகதியிட்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாயிருக்கிறது.

இதன்படி சம்பந்தப்பட்ட பயிற்சி நெறிக்கான பாடத்திட்டங்களாக தமிழில் தாபனக்கோவை அதிகாரங்கள் 1 முதல் 8 வரை மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் சிங்கள, ஆங்கில விளம்பர அனுபந்தங்களினால் அதிகாரங்கள் 1 முதல் 11 வரை 16, 23, 24; 25, 26, 29, 31, 32, 33, 47, 48 என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றத்தின் காரணமாகவே விண்ணப்பதாரர்கள் மத்தியில் தமிழ் விளம்பரத்தைப் பார்ப்பதா ஆங்கில சிங்கள விளம்பரத்தைப் பார்ப்பதா என்ற குழப்பநிலை எழுந்திருக்கிறது. (இ-ஐ)

## நம்பிக்கையுடன் செய்யும் கருமமே சித்திபெறும்

சுன்னாகம், அக் 28

நம்பிக்கையோடு செயற்படுத்தப்படும் எந்த ஒரு கருமமும் சித்திதரும்.

எம்மால நிறைவேற்றிக் கொள்ள முடியாதென கைவிடப்பட்ட கருமங்களும் இறைவன் சித்தத்தினால் நிறைவேறியுள்ளதையும் நாம் கண்டிருக்கிறோம். ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன் துண்டுகளையும் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்த திருமறை உவமையானது கிறிஸ்தவர்களுக்கு இந்த உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது.

ஏழாலை தெற்குத் திருச்சபை ஆலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனை வைபவத்தில் உரை ஆற்றிய யாழ் சென் யோன்ஸ் கல்லூரி அதிபர் கலாநிதி ஈ.எஸ். தேவசகாயம் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் கூறியதாவது;

எப்படியும் செய்தே ஆக வேண்டும் என்ற நிலைப்பாடு எம்மத்தியில் குறைந்து வருகின்றது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தனது உரையைக் கேட்க வந்த மக்களில் கரிசனை உள்ளவராக இருந்தார்.

அவரது சீடர்களில் ஒருவனான அந்திரேயா கிடைக்கப்பெற்ற உணவைக் கொண்டு ஆண்டவர் ஏதாவது செய்வார் என்ற விசுவாசமுடையவராக இருந்தார்.

அவரது விசுவாசம் வீண்போகவில்லை.

அத்தனை ஜனங்களும் போஷிக்கப்பட்டார்கள்.

விசுவாசத்துடனும் தேவசித்தத்தை முன்வைத்து செய்யப்படும் எல்லாக் காரியங்களும் நன்கு நிறைவேறும்,

இவ்வாறு அவர் கூறினார். (ச-27)

### வாணி விழா பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம் அக் 28

குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கலை இலக்கிய மன்றம் நடத்திய வாணிவிழாப் பேச்சுப் போட்டியில் பின்வருவோர் 1 ஆம் 2 ஆம், 3 ஆம் இடங்களைப்பெற்றனர்:


ஆரம்ப பிரிவு: 1. சி. சிவகௌரி, 2. சி மதனமோகனராஜ், 3. ந. வித்தியா

போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன.

கீழ்ப் பிரிவு: 1 சி. சிவந்தினி 2. ப சனீஸ்வரன் 3 தே. சுப ஜினி.

மத்திய பிரிவு: 1. இ. [illegible] 2. ப. மங்கை [illegible]ரன். (ச)


புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை ரூபா 68/55 125 கிறாம்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



சரியான நிறை தவறாது காட்டும் யூனியன் மேடைத் தராசுகளை சிங்கர் விநியோகிக்கிறது!



யூனியன். சரியான நிறையைத் தவறாது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன. வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை

அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி.

நீங்கள் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு

சிங்கர்* மாசற்ற மேன்மை

விலை: ரூ. 11,215/-

Minds/SA/5

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## SERVICE OF INSTALLATION

The New Principal of Jaffna College
DR. S. JEBANESAN
will be duly installed at a Service to be held at
**The Cathedral Church Vaddukoddai**
at 3-30 p. m. on Saturday the 29th October.
Friends and Old Boys are cordially invited.

**Miss C. V. Selliah,**
Secretary J. C. B. D.
(C/669

## CAKE EXHIBITION

An Exhibition of decorated Cakes & Sugarcraft will be held at the residence of
**Mrs. T. Mather**
by her pupils on :
**Friday October 28th 12 noon - 6p.m.**
**Saturday October 29th 9a.m. - 6p.m.**
at Lowton Road, Manipay.
(Near Manipay Hindu College)
Entrance by Tickets — Rs. 5/-
(7552)

## இடமாற்றம்

வடடு வலிமேற்கு பிரதேச சபை கிராம உப அலுவலகத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. குமாரசாமி பண்டத்தரிப்பு வலி தென்மேற்கு பிரதேச சபை பட்டின உப அலுவலகத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு அராலி கிராமஉபஅலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ச. சற்குணனந்தன் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

(ச-ரி)

## நவாலிமகாவித்தியாலயத்தில் சீரமைப்புப் பணிகள்துரிதம்

நவாலிமகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினதும், அதிபர் ஆசிரியர்களினதும் அயராதமுயற்சியினுல் அங்கு பல சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பணிகளுக்குப் பெற்ேருரும், நலன்விரும்பிகளும் பூரண ஆதரவு அளிப்பதுடன் பணியிலும்பங்குகொள்ளுகின்றனர்.

வித்தியாலய வளாகத்தைச் சுற்றிக் 'கொங்கிறீற்'' தூண்கள் நட்டு, முட்கம்பி வேலி அடைக்கும் பணி முடிவடைந்தது.

நீர், மின்வசதிகளை ஏற்படுத்துவதற்கு வித்தியாலய நிர்வாகமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், நலன்விரும்பிகளும் கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நிவாரணம் வழங்கப்படுகிறது

கடந்த 15 ஆம் 18ஆம் திகதிகளில் கப்பல் மூலம் இந்தியாவில் இருந்து இலங்கை வந்த அகதிகளுக்கு யாழ் செயலகத்தில் வைத்துநிவாரணம் வழங்கப்படுகின்றது

## வங்காலைவென்றது

மன்ஞர் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வங்காலை மத்திய மகாவித்தியாலயம் (கொத்தணிப் பாடசாலை) 203 புள்ளிகளைப் பெற்று முதலிடம்பெற்றது 193 புள்ளிகளையும் 188 புள்ளிகளையும் முறையே பெற்று மன்ஞர் புனித சவேரியர் ஆண்கள் மத்திய மகாவித்தியாலயம் 2 ஆம் இடத்தையும், எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (இ)

## நவராத்திரி பூசை

முல்லைத்தீவு கடைத்தெரு ஞானவைரவர் ஆலயத்தில நவராத்திரிப் பூசைகள் 9 நாளும் பிரதம குரு ஸ்ரீ.க. விஞயக மூர்த்தி அவர்க நடத்தப்பட்டு விஜய தசமி அன்று விசேட பூசையுடன் முடிவுற்றது. (இ-92)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம்

எனது இல வைஏ: 02/02/04

இப் பல்கலைக்சழகத்தில் கீழ்ச்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1988 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆம் தேதி வரை என்னுல் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவி:** தொழினுட்பவலர் தரம் II 'ஆ' (அமைய) கணனிப் பகுதி.

**சம்பளம்:** 60ருபா 80சதம் நாளொன்றிற்கு.

**தகைமைகள்:** இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் திறமைச் சித்திகளுக்குள் விஞ்ஞானம், கணிதம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்

**குறிப்பு:** கணனி நிகழ்ச்சி முறைப்படுத்தலில் அறிவுடையோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:** 40 வயதிற்கு மேற்படலாகாது

**தெரிவு:** உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து விண்ணப்பப் படிவங்களை நேரிலும், 23×10 சமீ அளவுடைய முகவரியிடப்பட்ட முத்திரையொட்டப்பெற்ற கடித உறையை அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்,

**— பதில் பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
25-10-1988

(C/679)

## First Year Anniversary



**Sabapathipillai Kulasegarampillai**
(Rted Station Master)

In Cherished memory of the late Mr. Sabapathipillai Kulasegarampillai of Araly North Vaddukoddai

**Born: 2 - 10 - 1903**
**Died: 8 - 11 - 1987**

"Dear Darling Father Deep in our hearts
You will always Stay
Loved and remembered every day
If not for the fatal shell attack on that day
You'll be living in our midst today"
Fondly remembered by your be loved

**Wife, Children,**
in Laws and
**Grand Children.**

(7554)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
தம்பாபிள்ளை சோமசுந்தரம்

ஆண்டவன்படைப்பு: 1. 5. 1932
அழிப்பு: 9. 11. 1987

எங்கள் குடும்பத்தை ஏற்றமுறச் செய்து குடும்பத்தின் ஒளி விளக்காய் எமக்கு நல்வழி காட்டி, உழைப்பின் சிகரமாய் வாழ்ந்த எங்கள் பாசத் தலைவரே,

எம்மை விட்டு நீங்கள் மறைந்து ஓராண்டு காலம் சென்றுவிட்டாலும் நீங்கள் காட்டிய அன்பு, வழங்கிய அறிவுரை, செய்த நற்செயல்கள் எங்கள் மனதிலிருந்து அகல மாட்டா. உங்களை என்றும் நினைத்திருப்போம். உங்கள் வழியில் வாழ்ந்திடுவோம்

உங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி, மக்கள்,**
**மருமகன், பேரன்.**

சுதுமலை தெற்கு.
மானிப்பாய்.
(7475)

## ஓராண்டு இதய அஞ்சலி



மலர்வு:
30 - 12 - 1930

அநியாய இழப்பு:
28 - 10 - 1987

**திரு. அ. செ. அந்தோனிப்பிள்ளை**
(இளைப்பாறிய அரசாங்க இலிகிதர் வன இலாகா யாழ்ப்பாணம்)

மாருத அன்பினுல் மகிழ வைத்த
எம் தலைவா
தீராத துயர் தன்னில் துவள வைத்து
எங்கு சென்ருய்?
ஈராறு மாதமாய் உனை நினைந்து
வாடும் நாம் உன்
பாதார விந்தமதில் எமது
அஞ்சலியைச் செலுத்துகின்ேறும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(7478)

## முதலாண்டு நினைவஞ்சலி



மலர்வு:
12-04-1923

அநியாய
அழிப்பு:
09-11-1987

திதி:
28 10-1988

**திரு செ. நடராசா**
(இளைப்பாறிய ஆசிரியர்)


ஓராண்டு மட்டுமென்ன?
ஒரு நூற்றண்டானுலும்
தீராது நம் கவலை
தெரியாது நம் மனங்கள்
ஆராத வாஞ்சையுள்
அருந்துணையை நாமிழந்து
நீராகி உருகியழும்
நிலைதந்தாய் ஏனே?
மயிலை முருகனின்
சிவதொண்டில் நல்லார்வம்
உய்வுக்கு ஒழுக்க நெறி
உயர்வுக்கு பொது நோக்கு
ஐயத்துக் கிடமின்றி
வையத்தில் இவையெல்லாம்
நின்பாற் கண்டோம்.

பிரிவால் தயருறும்
**மனைவி, பிள்ளைகள், சகோதரி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

குலனை,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(7555)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

நன்றி நவிலலும்



**ஸ்ரீமான் கந்தையா மாணிக்கம்**
(ஓய்வுபெற்ற வைத்தியர்)

மண்ணகம் : 02 01.1906
விண்ணகம் : 29,09.1988

எங்கள் அன்புத் தெய்வம் மரணித்த செய்தி கேட்டு எங்கள் இல்லத்துக்கு வருகை தந்து எமது பிரிவுத் துயரில் பங்கு கொண்டும் எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவியும், அன்னுரின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட அன்பர்கள், நண்பர்கள், உற்ருர், உறவினர், அயலார் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்ேறும்.

29-10-88 சனிக்கிழமை நாளை நண்பகல் அன்னுரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொண்டு அவர் தம் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ேறும்

**திருமதி சரஸ்வதி மாணிக்கம் (மனைவி)**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.
(7563)

## நான்காம் ஆண்டு முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**சுந்தரம் ஐயாத்துரை**

தோற்றம்: 9-3-1921
மறைவு: 22-10-1984

திதி: 7-11-1988



**ஐயாத்துரை அமுதன்**

தோற்றம்: 24-4-1957
மறைவு: 9-11-1987

திதி: 28-10-88

அப்பா!
முழுதென நான்கு ஆண்டுகள்
நம்ப முடியாமல் ஓடிவிட்டன
அன்று சிதையிலே மூட்டிய தீ;
அணைந்து விட்டது என்றே நம்பினேம் - ஆனுல்
தொடர்ந்து வந்த பூகம்பம்
எதுவுமே புரியவில்லை அப்பா
ஆண்டுகள் நான்கல்ல எங்கள்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவும் பாசமும்
எங்களை விட்டு நீங்காது அப்பா!

ஓராண்டு சென்றதண்ணு;
எமதில்லம் இருண்டதண்ணு
உமை நினைத்த போதினிலே;
எமதுள்ளம் துடிக்குதண்ணு
வேதங்கள் கூட எங்கள் வேதனையை
தீர்க்கவில்லை
ஆருத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு - நீர்
மீளாத்துயில் கொள்ளச் சென்றதெங்கே!
தாயாரும் சோதரரும் சிந்தை கலங்கி
நிற்கின்ேறும்.
இத்தரணியில் வாழ்ந்தது போதுமென்ரு
எம் தந்தையுடன் சென்று விட்டீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் கண்ணீர்ப் பூக்களால்
அஞ்சலி செலுத்தும்,

குடும்பத்தினர்.

40, குறுக்குத் தெரு
நல்லூர்
யாழ்ப்பாணம்.
(7448)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

**பொருள்:**

ஒருவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறையான இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக்கொள்ளவேண்டும்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி: 24805, 22073
யாழ்ப்பாணம்.
28-10 1988
த. பெ இல 23


## புத்துயிர் கொடுப்பார்களா?

நாடாளுமன்றத்தை உடனே கலைத்து விடவும்—

காபந்து அரசாங்கம் ஒன்றை நிறுவவும்—

அந்தக் காபந்து அரசாங்கத்தின் கீழ் பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தவும்—

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன விருப்பம் தெரிவித்துள்ளார்!

பௌத்த மகாசங்கத்தின் நான்கு பிரதான பீடாதிபதிகளும் தெரிவித்த ஆலோசனையை மிகப் பணிவடக்கத்துடன் ஏற்றுள்ளார் அவர். முதலில் ஜனாதிபதி தேர்தல், அதற்குப் பின்னரே நாடாளுமன்றக் கலைப்பும், பொதுத் தேர்தலும் என்ற தமது முந்திய நிலைப்பாட்டை, மகாசங்கத்தினருக்கு மதிப்பளித்து மாற்றி உள்ளார்!

மக்களுக்கு அளிக்காத மதிப்பை, மகாசங்கத்தினருக்கு வழங்கி, தாம் பௌத்த மகாசங்கத்தின் அசல் அபிமானி, உண்மையான பௌத்தன் என்பதை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். காட்ட முயன்றுள்ளாரோ என்பதும் தெரியவில்லை. அரசியலைத் துறந்து போகும் இவ்வேளை, ஏன் கெட்ட பெயர் வாங்கவேண்டும்?; சரித்திரத்தில் தமக்கு நல்ல பெயர் கிடைக்கட்டும் என்று அவரது உள் மனது சொல்லியிருக்கக் கூடும்!

மகாசங்கத்தினர் தெரிவித்த ஆலோசனைகளை அமுல் நடத்தக்கூடிய விதத்தில் சரியான வழிமுறைகளைக் கைக்கொள்வதற்கு ஜே வி பி. இயக்கத்தினரும். ஏனைய எதிரணியினரும் இணங்க வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத்தைக் கலைத்து, காபந்து அரசாங்கம் நிறுவி, பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த முடியும் என்றும் திரு. ஜெயவர்த்தன நிபந்தனை விதித்திருக்கிறார்.

பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் அக்கறைப்படும் நிலையில், சரிசமையோடு ஆர்வம் காட்டும் நிலையில், தமிழ் மக்கள் இப்போது இல்லை. இரு தேர்தல்களினதும் விளைவாக நன்மை கிடைக்கும் என எதிர்பார்த்து அவற்றில் கலந்துகொள்ளும் மனநிலையிலும் தமிழர்கள் இல்லை.

தேர்தல்கள் முடிந்த பின்னர், புதிய அரசும் (அரசினரும்) புதிய ஜனாதிபதியும் தமிழர்களின் பிரச்சினைகளை எப்படி நோக்குகிறார்கள், தீர்த்து வைப்பதில் உண்மையான அக்கறை காட்டுகிறார்களா என்பதைப் பொறுத்து தமிழர் அரசியல் பின்னணியில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம் அது வேறு,

எனினும் தென்னிலங்கை வாழ் சிங்கள மக்களைப் பொறுத்த மட்டில், பொதுத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் குளறுபடி இல்லாமல், குழப்பம் காணாமல், நீதியான முறையில், அமைதியான சூழ்நிலையில் நடக்குமானால் — நடக்கப்போகின்றன என்றால் — அது நிச்சயமாக அவர்களுக்கு நல்ல செய்தியாகவே இருக்கும்.

பதினொரு வருடங்கள் ஒரே கட்சியின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் தொடர்ச்சியாக வாழ்ந்து பட்ட அனுபவங்களைக் கொண்டு. அவர்கள், புதிய தீர்மானத்தைச் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாகவே கருதப்படும்.

எனவே, ஜனாதிபதி ஜெயவர்தன தனது கடந்த கால விடாப்பிடி, இரும்புப்பிடிப் போக்கினைத் தளர்த்தி தேர்தலை நடத்த விருப்பம் தெரிவித்திருப்பதைச் சிங்கள மக்கள் வரவேற்கவே செய்வர்.

சமாதானத்திலும், சனநாயகத்திலும் உண்மையாகவே நம்பிக்கை கொண்டிருந்தால் ஜே.வி.பி யினரும், ஏனைய எதிரணியாளரும் திரு ஜெயவர்த்தனவின் நிபந்தனையை ஏற்றுக் கொள்வது அவசியம்

நாட்டில் அமைதியைத் தோற்றுவித்து, குழப்பமில்லாத வன்செயல் தவிர்ந்த, பாகுபாடில்லாத, பயமுறுத்தல் இல்லாத, சுதந்திரமான தேர்தல்களை நடத்த தெற்கில் எல்லாத் தரப்பினர் ஒத்துழைப்பும் தேவை.

அசையாமல் இருந்த ஜனாதிபதி அசைந்துவிட்டார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏனையோரும் தங்கள் வேண்டாத விடாப்பிடிகளைத் தளர்த்தி தெற்கில் சனநாயகத்துக்குப் புத்துயிர் கொடுக்க முன்வருவார்களா?

அவ்வாறு முன்வந்தார்களானால். பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தினால் மக்கள் விரும்பும் அரசியல் தலைவர்கள் யார் என்பது கலங்கலின்றித் தெரியவரும். இரண்டையும் முந்திப் பிந்தி நடத்தினால், முதலில் நடக்கும் தேர்தலின் பெறுபேறு மற்றதின் பெறுபேற்றைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள வாய்ப்பு உண்டு.

---

இன்னும் 11 தினங்களில் நடைபெறவுள்ள

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு வேட்பாளர் முன்னணியில்

## வாஷிங்டன் டைம்ஸ் நியூயார்க் டைம்ஸ் கருத்துக்கணிப்பு

வாஷிங்டன், அக். 27

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்னணியில் நிற்பதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்துள்ளன.

தேர்தலுக்கு இன்னும் 11 தினங்கள் இருக்கின்றன

இந்த நிலையில் நேற்று வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை கொலம்பியா ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துடன் இணைந்து இன்னொரு கருத்துக் கணிப்பை நடத்தியது.

வாஷிங்டன் டைம்ஸின் கணிப்பின் படி குடியரசு வேட்பாளர் புஷ், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் மைக்கல் டுகாகிஸிலும் பார்க்க 8 சதவீதத்தினால் முன்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நியூயார்க் டைம்ஸின் கணிப்பின் படி ஜோர்ஜ் புஷ் 13 சதவீதத்தினால் முன்னணியில் நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் தனது நிலையைப் பலப்படுத்த திரு. மைக்கல் டுகாகிஸ் 90 நிமிட டெலிவிஷன் பேட்டி ஒன்றை நடத்தினார்.

இப்பேட்டியின் போது வெளியுறவுக் கொள்கை பற்றிய கேள்விகளுக்கு அவர் தெளிவான பதில்களை அளிக்கத் தவறிவிட்டார் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

கருத்துக் கணிப்புக்கள் எப்படியிருப்பினும் கடைசி நிமிடத்தில் திருப்பம் ஏற்படும் என்று திரு. டுகாகிஸ் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இதேவேளை, அதிபர் றேகன் குடியரசு வேட்பாளர் புஷ்ஷுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய நேற்று கலிபோர்னியா சென்றார். (எ)

## லெபனான்மீது ராணுவ நடவடிக்கை இஸ்ரவேல் திட்டமிட்டுள்ளதாம்

பக்தாத். அக். 27

லெபனான் மீது இராணுவத் தாக்குதல் ஒன்றை பெரிய அளவில் நடத்த இஸ்ரவேல் நடவடிக்கை எடுத்து வருவதாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் குற்றஞ்சாட்டியிருக்கிறார்

"இஸ்ரவேலின் படைகள் லெபனான் எல்லையை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன. பீரங்கிப் படை அணி ஒன்றை லெபனானை நோக்கி இஸ்ரவேல் ஏற்கனவே அனுப்பிவிட்டது.

"லெபனானில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க முகாம்கள், பண்ணைகள் மீது இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதே இஸ்ரவேலின் திட்டம்" இப்படி அரபாத் தனது எச்சரிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அரபு நாடுகள் இஸ்ரவேலின் திட்டம் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் யாசீர் அரபாத் கேட்டுஇருக்கிறார். (எ)

## மூன்று வார கால முயற்சியின் பின் இரண்டு திமிங்கிலங்கள் மீட்பு

அலாஸ்கா அக் 27

அலாஸ்காவில் பனிப்பாறைக்குள் சிக்கிக்கொண்ட மூன்று திமிங்கிலங்களில் இரண்டு உயிருடன் மீட்கப்பட்டுவிட்டன.

மூன்றாவது திமிங்கிலம் உயிரிழந்து விட்டதாக நம்பப்படுகிறது.

எஸ்கிமோக்களின் உதவியுடன் இந்த மீட்புப் பணி இடம் பெற்று வந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமான இப்பணி நேற்று முடிவடைந்தது.

கடைசியாக சோவியத் யூனியனைச் சேர்ந்த கப்பல்கள் பனிப்பாறையை உடைத்து இரண்டு திமிங்கிலங்களும் கடலுக்குள் செல்ல வழி வகுத்தன.

அதுவரை எஸ்கிமோக்கள் பனிப்பாறையைத் துளைத்து திமிங்கிலங்களுக்கு சுவாசிக்க வழி செய்து வந்தனர்.

இந்த மீட்புப் பணியில் அமெரிக்க கப்பல்களுடன் சோவியத் கப்பல்களும் ஈடுபட்டன. (எ)

### ரஷ்சியாவில் எய்ட்ஸ்

மாஸ்கோ, அக் 27

சோவியத் யூனியனில் எய்ட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை 30 இல் இருந்து 90 ஆகஅதிகரித்திருக்கிறது.

இப்படி மாஸ்கோ அரசின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்ளூர் மக்களால் இந்த நோய் பரப்பப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

### ஒருநாள் விவாதம்

ஐநா, அக் 27


பலஸ்தீனியர்களின் பத்து மாதகால தாயகம் மீட்கும் கிளர்ச்சி பற்றி சிறப்பு விவாதம் ஒன்றை நடத்த ஐநா பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

அரபு நாடுகளின் கோரிக்கையை ஏற்று இந்த விவாதம் ஒரு நாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### ஆளும் கட்சி தோல்வி

தென் ஆபிரிக்காவில் நேற்று நடந்த மாநகர சபைத் தேர்தலில் தீவிர நிறவெறியை ஆதரிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியீட்டி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

ஆளும்கட்சி ஜோஹன்னஸ்போர்க், பிறிற்றோறியா ஆகிய நகரங்களில் கடும் போட்டியின் மத்தியில் வெற்றியீட்டியது. (எ)



படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரத்தின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பருத்தித்துறை திக்கம்முனைத்திடலில் வைக்கப்பட்டிருந்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள்.

வல்வெட்டித்துறை பிரசைகள் குழுப் பேச்சாளர் திரு. எஸ். நடனசிகாமணி உரையாற்றுவதையும், பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் பேழை மலர்களால் போர்க்கப்பட்டிருப்பதையும், கூட்டத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (இ - 118 - 70)

## கமநல சேவை நிலையத்தை மையமாக நிறுவவும்

### கமநலசேவை ஆணையாளருக்கு மகஜர்

கோப்பாய், அக் 28

சாவகச்சேரி தொகுதிக்கான கமநல சேவை நிலையத்தை முன்பு இருந்த இடத்திலேயே இயங்கவைக்கவும் அல்லது அதனை சாவகச்சேரி தொகுதியில் மையப்பிரதேசத்தில் இயங்கவைக்கவும்

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை சாவகச்சேரி விவசாயிகள் வடமாநில கமநல சேவை ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இந்நிலையம் கைதடியில் இயங்கி வருகின்றது இது சாவகச்சேரி தொகுதியின் எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இதனால்உசன், வரணி, எழுதுமட்டுவாள் போன்ற இடங்களில் இருந்து இந்நிலையத்தை நாடிவரும் விவசாயிகள் பயணத்திற்கு ஒரு நாளைச் செலவிடவேண்டியுள்ளது

தற்போது பயிர்களை பராமரிக்கும் காலங்களில் விவசாயிகள் இவ்வளவு நேரத்தை செலவிடுவது இயலாத காரியமாகும் இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-72)

### கிராமப்புற பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

சுன்னாகம், அக். 26

கடந்த பல வருடங்களாக தளபாடங்கள் வழங்கப்படாத கிராமப்புறப்பாடசாலைகள் பலவற்றிற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மிக அத்தியாவசியமாகத் தளபாடங்கள் தேவைப்படும்பாடசாலைகள் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்களின் சிபார்சுடன் தளபாட விநியோகத்திற்குப் பொறுப்பான பிரதம கல்வி அதிகாரி திரு. கந்தசாமியுடன் தொடர்பு கொண்டு தளபாடங்களைப்பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச 27)

மலையகத் தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும்

## சுதந்திரக்கட்சியின் போக்கு

### விந்தைக்குரியது என்கிறார் பிரேமா

நுவரெலியா, அக 28

நாடாளுமன்றத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் நாற்றோருக்கு பிரசா உரிமை வழங்குவதற்கான சட்ட மூலத்தை நான் கொண்டு வந்தேன்

சகலருக்கும் பிரசா உரிமை பெற்றுக் கொடுக்க வழிவகுக்கும் அந்தச் சட்டமூலத்தை சுதந்திரக் கட்சி அன்று எதிர்த்ததுஎனினும்நாம் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது அதனைச் சட்டமாக்கினோம்.

அப்படிப்பட்ட சுதந்திரக்கட்சியினர் இன்று மலையக மக்களுக்காக குரல் கொடுக்கிறார்கள்; அவர்களின் ஆதரவைக் கோருகிறார்கள். இது விந்தைக்குரியதாகும்.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாச நுவரெலியாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் சொன்னதாவது:-

சுதந்திரக் கட்சியினர் பதவிக்குவந்தால்மலையக மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக கூறி வருகிறார்கள்.

அன்று பிரசா உரிமை வழங்குவதை எதிர்த்தவர்கள் இன்று அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்கள். இது அவர்களின் தெளிவற்ற கொள்கையையே எடுத்துக் காட்டுகிறது.

சுதந்திரக் கட்சியினர் மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.

இந்திய வம்சாவழியினரின் நாடற்றவர் பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு கண்டு விட்டோம் இதற்கான சட்டம் விரைவில் வந்து விடும்.

சட்டம் நிறைவேறியதும் இந்த நாட்டில் நாடற்றவர் என்ற பிரச்சினையே இருக்க மாட்டாது.

இவ்வாறு அவர் கூறினார். (ஓ)

### யாழ். இந்து பழைய மாணவர் நிர்வாகக் குழு

கொழும்பு, அக 28

யாழ் இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகக் குழு கடந்த 16 ஆம் திகதி கூடியது.

நான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இக் கூட்டம் நடந்தது.

கொழும்புக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை நவம்பர் 13 ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்துவது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-எ)

### பங்கு பற்றுதோருக்கு விஷேச வகுப்பு

யாழ்ப்பாணம் அக் 28

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் வாழ்க்கைத் திறன் கல்வி பயிற்சி நெறியின் இறுதி நாள் வகுப்புகளில் பங்கு பற்றுதவர்களுக்கான விசேஷ வகுப்பு எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறும்

இந்த விசேஷ வகுப்பு [illegible] கல்லூரியில் நடைபெறும். (இ-9)

### இன்று கண்காட்சி

சாவகச்சேரி அக் 28

மக்கள் பிரசுராலயம் யாழ் கிளை ஆதரவில் நடைபெறும் சோவியத் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது (இ-31)

## ஒஸ்மானியா வெள்ளி விழா

### நிகழ்ச்சிகள்—போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம். அக் 28

ஒஸ்மானியக் கல்லூரியின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம்திகதி வரை சிறப்பாக நடைபெற்றன

21 ஆம் திகதி காலை 6 00 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டிகள் இடம்பெற்றன. 15 வயதிற்கு மேற்பட்டோரில் முதலாவது இடம் எம். எஸ் எம். ஜவ்ஸின். 2 ஆம் இடம் எஸ் எம். எஸ் ஆஸிப், 3 ஆம் இடம் எம் பி ரேசான.

15 வயதிற்கு மேற்பட்டோரில் 1 ஆம் இடம் எஸ் இம்தியாஸ். 2 ஆம் இடம் ஏ ஜே. மைரூஸ் 3 ஆம் இடம் எஸ் ஏ. சி. சௌஸாத்.

22 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்குமலர்வெளியீட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் இடம் பெற்றன.

சிறப்பு விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் முதலாவது மலரை வெளியிட, அல்ஹாஜ் எம். எல் அப்துல் காதர் அதனைப் பெற்றுக் கொண்டார்.

சிறப்பு விருந்தினரும் முன்னை நாள் அதிபருமான ஜனாப் எம். எம் யூ. சுப் 2ஆம் மலரை வெளியிட சட்டத்தரணி எம். எம் மன்சூர் அதனைப் பெற்றுக்கொண்டார்

பிரதம விருந்தினர். ஆரம்பகால அதிபர் சி எம் ஏ. ஜிப்ரி 3ஆம் பிரதியை வெளியிட ஜனாப் கே. முத்து முஹம்மது அதனைப்பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் ஜனாப் சி. எம். ஏ. ஜிப்ரி பரிசுகளை வழங்கினார்,

3 ஆம் நாளான 23 ஆம் திகதி பிற்பகல் 3 30 மணிக்கு பழைய மாணவர்களால் வெள்ளிவிழா கட்டடமாக அமைக்கவுள்ள மர்ஹூம் மக்பூல் பார்வையாளர் அரங்கிற்கான அடிக்கல்லை தக்பீர் முழக்கத்தின் மத்தியில் ஜனாப் சி.எம் ஏ. ஜிப்ரி நட்டார்.

அதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. (இ)

### கேதார கௌரி விரதம்

சரசாலை அம்மன் கோயிலில் கேதார கௌரி விரதம் ஆரம்பமாகியுள்ளது.

கணிசமான பெண்கள் இவ்விரதத்தை அனுட்டித்து வருகின்றனர். (ச-75)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உழுந்து மா**

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.



# உதயன்

28 - 10 - 1988 வெள்ளிக்கிழமை



**மல்லி கலந்த கோப்பி**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100gr/ பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

1 பக்கட்டில் 10/ ரூபா வியாபாரிகளுக்கு விசேட கழிவுகொடுக்கப்படும்.

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.


ஆசியக் கிண்ண கிரிக்கெட்:

## ஆரம்ப ஆட்டத்தில் இலங்கை வெற்றி!

டாக்கா அக் 28

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டியின் ஆரம்பஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை வென்றது

முதலில் துடுப்பெடுத்தாடியபாகிஸ்தான்அணி 44 ஓவர்களில் 7 விக்கட் இழப்புக்கு 194 ஓட்டங்களை எடுத்தது

இலங்கை அணி 38 3 ஓவர்களில் 5 விக்கட் இழப்புக்கு 195 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தில் வென்றது

மகாநாம 55 ஓட்டங்களையும் அரவிந்த டி சில்வா 44 ஓட்டங்களையும் பிரண்டன் குருப்பு 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்தப் போட்டி டாக்காவில் நடைபெற்றது

மற்றொரு போட்டியில் இந்தியா, பங்களாதேஷைத் தோற்கடித்தது. (உ.எ)

## ஜே. வி. பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பதற்கும் இந்தக் கோரிக்கை வழி செய்யும் என நான் நம்புகிறேன்-

இப்படி அவர் தெரிவித்தார்.

இலங்கை நிலைமை குறித்து 'தி இகனமிஸ்ட்' சஞ்சிகை தனது கருத்தை இவ்வாறுதெரிவித்திருக்கிறது:

எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்திய ஜவான்கள் அநேகமாக நாட்டைவிட்டுப் புறப்படும்படி கேட்கப்படலாம்

அமைதிப்படை என்ற பெயரில் சுமார் 50ஆயிரம் இந்தியத்துருப்பினர் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழரும், சிங்களவரும் ஒருவரையொருவர் கொலை செய்வதைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஆனால் இவற்றில் எதுவும் முழுமையாக ஈடேறவில்லை.

தமிழ் பிரிவினைவாதிகளுக்கு எதிராக ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கடைப்பிடித்த போக்கைவிட கடுமையான ஒரு போக்கையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடைப்பிடிக்க வேண்டுமென்று அந்தக் கட்சி வட்டாரங்கள் ஆலோசித்து வருகிறது

இவ்வாறு அந்த சஞ்சிகை கருத்துத் தெரிவித்திருக்கிறது. (உ-ஐ)

## கண்டித்து.....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

டுத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இதனைக் கண்டிக்கும் முகமாக தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் 27, 28 ஆம் திகதிகளில் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அரச, பொது, வியாபார, போக்குவரத்து நிறுவனங்களும், சங்கங்களும் தங்கள் கடமைகளை நிறுத்தி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம்

மாணவர்களும், ஆசிரியர்களும் கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலைகளுக்குச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

28ஆம் திகதி (இன்று) சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பிரதான மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, கண்ணுடிப்பிட்டி மயானம் வரை இடம்பெறும் ஊர்வலத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## எதிர்ப்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் உள்ள அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பௌத்த மத குருமார்களுக்கு இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

சகல நிக்காயக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மகாநாயக்க தேரர்களும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தவுள்ளனர்

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள பிரேரணைகள் வருமாறு:

★ இந்திய - இலங்கை அமைதி உடன்பாடு ரத்துச் செய்யப்பட வேண்டும்.

★ இந்திய அமைதிப் படை திருப்பி அனுப்பப்படவேண்டும்.

★ வடக்கு - கிழக்கு இணைப்பு ரத்துச் செய்யப்படவேண்டும். மாகாணசபை முறை ஒழிக்கப்பட வேண்டும்.

★ நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும்.

★ ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகியவற்றின் தேர்தல்கள் ஒன்றாக நடத்தப்படவேண்டும். (உ-எ)

## தாதிகள் நேர்முகப் பரீட்சை
### அக். 31, நவ. 3,4 திகதிகளில்

யாழ்ப்பாணம், அக் 28

கடந்த 16ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற தாதிகள் தெரிவுப் பரீட்சைக்குத்தோற்றியவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்,மானிப்பாய், நல்லூர், கோப்பாய் ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தமாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமையும்—

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு நவம்பர் மாதம் 3 ஆம் திகதியும்—

சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு நவம்பர் மாதம் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ் வதிவிடச்சான்றிதழ் (கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டது) வேறு தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் மேற்குறிப்பிட்ட திகதிகளில் காலை 8 மணியளவில் யாழ். சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைக்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## கவுண்டா தெரிவு

ஸாம்பியாவின் ஜனாதிபதியாக மீண்டும் திரு. கென்னத் கவுண்டா தெரிவு செய்யப்பட்டார்

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அவரே ஜனாதிபதியாக இருப்பார்.

ஸாம்பியாவில்ஒருகட்சி ஆட்சி முறையே அமுலில் உள்ளது.

64 வயதான திரு. கவுண்டா மட்டுமே இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். (உ-எ)

அதிபர் ஸியா மரணம்:

## விமானியே விமானத்துக்கு வெடிகுண்டு வைத்தார்

நியூயோர்க்; அக் 28

பாகிஸ்தான் அதிபர் ஸியா பயணஞ் செய்த விமானத்திற்கு, அந்த விமானத்தை ஓட்டிய விமானியே வெடிகுண்டு வைத்திருக்கிறார்.

விபத்து பற்றி நடந்த விசாரணையில் இது தெரியவந்ததாக அமெரிக்க பத்திரிகை 'டைம்' செய்தி வெளியிட்டது.

அதிபர் ஸியா கடந்த ஆகஸ்ட் 17 இல் பவல்பூர் என்னும் இடத்தில் விமான விபத்தில் உயிரிழந்தது தெரிந்ததே.

அந்த விமானத்தை ஓட்டியவர் சஜித் என்ற விமானி. ஒருபோதும் உயர்மட்ட அதிகாரிகளின் விமானத்தை ஓட்டிச் செல்ல இவர் அனுமதிக்கப்படவில்லை.

அதிபர் ஸியாவின் விமானத்தை ஓட்டும் பொறுப்பு கடைசி நிமிடத்தில் இவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. (எ-4)

## ஜே.ஆர்...

பிரதமர் காந்தி சொன்னதாவது;-

இந்திய - இலங்கை உடன்பாட்டை அமுல் செய்வதில் எந்தவித இடையூறும் இருக்காது என்று நான்நம்புகிறேன்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் எனகு முழு நம்பிக்கை உண்டு.

வடக்கு—கிழக்குமாகாணசபைத்தேர்தல் நல்ல முறையில் நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கின்றேன் என்றார்

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை ஒத்திப் போடும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நெருக்குதல் கொடுக்கப் படுகிறதே!

—இப்படி செய்தியாளர்கள் பிரதமர் காந்தியைக் கேட்டனர்.

அதற்குப்பதிலளிக்கையில் ''திரு, ஜெயவர்த்தன மீது எனக்கு நம்பிக்கையிருக்கிறது. அவர் நெருக்குதலுக்குப் பணிந்து விடமாட்டார்என்று நம்புகின்றேன்''—என்று பிரதமர் காந்தி சொன்னார்.

இலங்கையில் யார் அரசுக்கு வந்தாலும் அவர்கள் இந்திய - இலங்க அமைதி ஒப்பந்தத்தைப் போற்றி மதிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. — என்றும் பிரதமர் தெரிவித்தார் (உ-ா)

## சகல கட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்

இது விஷயத்தில் அரசு மக்களின் நம்பிக்கையைப் பெற்றால் மட்டுமே பதற்றம் நீங்கும்.

இதற்கு முன்னோடியாக அரசு முதலில்—

★ நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்,

★ மாகாண சபைகளையும் கலைக்க வேண்டும்,

★ அவசர காலநிலை நீக்கப்படவேண்டும்

★ பாரா இராணுவப் பிரிவுகள் கலைக்கப்படவேண்டும்.

★ காவலில் உள்ள அரசியல் கைதிகள், மாணவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்தைக்காப்பாற்றி அமைதியை ஏற்படுத்துவ [illegible] (உ-ஏ)


## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு
பேப்பர் வெட்டும் இயந்திரம்
(Cutting Machine)
உடன் தேவை

தொடர்பு:
**உதயன்**
அச்சக முகாமையாளர்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/681)



மாணவர்களே! மாணவர்களே! மாணவர்களே!

உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்காக
முற்றிலும் விரிவான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள

## "உயர்தர சேதன இரசாயனம்"
## MODERN APPROACH TO ORGANIC CHEMISTRY

திரு. நாகரட்ணத்தின் B Sc. [Ceylon]

பலவருட கற்பித்தல் அனுபவத்தின் ஓர் உன்னத வெளிப்பாடு

மேலும் விபரங்களுக்கு;
செல்வன் T. திருச்செல்வநாதன்
இல. 195, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:
✶ பூபாலசிங்கம் புத்தகசாலை
✶ ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை
✶ ஸ்ரீலங்கா புத்தகசாலை,

(C-421)


## நெஞ்சுருகிய கண்ணீர் அஞ்சலி

அமரர்

### மாண்புமிகு வீ. இராஜசங்கரி

(தலைவர், பிரஜைகள் குழு, தென்மராட்சி)

திரு. வீ இராஜசங்கரி அவர்கள் கடந்த 26 - 10 - 88 புதன் இரவு. சாவகச்சேரி தபால் நிலைய சந்தியில் வைத்துக் கொலை செய்யப்பட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தென்மராட்சி மக்களுக்காக நீதியாகவும், நேர்மைத்திறத்துடனும் சேவையாற்றிய

**திரு. வீ இராஜசங்கரி அவர்கள்**

கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்

அன்னாரின் பூதவுடல் சாவகச்சேரி, கற்குழி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும்.28 - 10 - 88 வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி பிரதான மண்டபத்தில் பொதுமக்களின அஞ்சலிக்காக வைக்கப்பட்டு சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும். அன்றைய தினம் தென்மராட்சியில் உள்ள சகல அமைப்புக்களையும் சேர்ந்த மக்களை அணிதிரண்டு அன்னருக்கு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பிரஜைகள்குழு, மாணவர் ஒருங்கிணைப்புக்குழு, அன்னையர்முன்னணி, தனியார் மினிபஸ்சங்கம், வர்த்தகர் சங்கம்,**

**தமிழீழ தேசிய மகளிர் மன்றம், தமிழீழ தேசிய இளைஞர் மன்றம்.**

**தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி** (7491)

## மரண அறிவித்தல்

திருமதி

**பாக்கியசுந்தரம் கந்தையா**

திருமதி. பாக்கியசுந்தரம் கந்தையா அவர்கள் 24- 10- 88 இல் அமெரிக்காவில் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சாவகச்சேரி வாசியான அல்வாயூர் K V கந்தையா ஆசிரியர் அவர்களின் துணைவியாரும், திருமதி பரமேஸ்வரி (U S. A), கலாநிதி பாலச்சந்திரன் (U.S.A) முன்னாள் OTS பேரின்பநாதன்(U S A), V, K பாலசுப்பிரமணியம் ஆசிரியர் ஆகியோரின் தாயாரும், முன்னாள் C T B வடபிராந்திய முகாமையாளர் R, இராஜேந்திரம்(U S A), திருமதி மொனிக்கா(U S A) திருமதி வசந்தா (U S A) திருமதி கமலாவதி ஆகியோரின் மாமியாரும் திரு. ரவீந்திரன் (U S A) திருமதி ரேகினி(CANADA) திருமதி பிறேமினி (CANADA) திருமதி சுபாஷினி(U S A தர்சினி, கமலா, ஜெரூஷான் சுமந்திரன், சுமதி, சுகந்தி, சுதர்சன், முகுந்தன், முகிலன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1703, S.CLEVELAND,LITTLEROCK,AR72204, U.S.A இலுள்ள அவரின இல்லத்தில 26- 10- 88 இல் நடைபெற்றது (7490)

## மரண அறிவித்தல்கள்

### திரு. இராமலிங்கம் சிவராஜா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி வடக்கு, நாவலடி ஒழுங்கை 'சாந்தி பவனம்' இல்லத்தலைவன், இளைப்பாறிய விகிதர் இராமலிங்கம் சிவராஜா இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கனகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், ஞானம்பிகை, புவனேஸ்வரி அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவயோகராஜா(பிரான்ஸ்) திருமதி கிரிஜா, சுபாஜி (யாழ். பல்கலைக்கழக மின் கணணித்துறை) கீதா, கணேஷா (பழைய மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், திரு. சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி காந்தா சிவயோகராஜா, திரு சேனாதிராஜா, துஷ்யந்தி அம்பலவாணர் (யாழ். மருத்துவ பீடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லவன் நேத்தாஜி, சிந்துஜா, காயத்திரி ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28 – 10 – 88 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு. ப 10 00 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சுபாஜி.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு. [7482]

### திரு. வீரசிங்கம் இராசசங்கரி

(சட்டத்தரணி)

தென்மராட்சிப் பிரஜைகள் குழுவின் தலைவரும் சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கச் செயலாளரும், சட்டத்தரணியுமான திரு. வீரசிங்கம் இராசசங்கரி அவர்கள் 26 10- 1988 அன்று அகால மரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை வீரசிங்கத்தினதும் (முன்னாள் அதிபர், புத்தூர், சோமாஸ்கந்தா), திருமதி இரத்தினம் அன்னபாக்கியம் அவர்களினது அன்பு மகனும், வசந்தநாயகியின் அன்புக் கணவரும், தர்மசங்கரி (கனடா), ஆனந்தசங்கரி (முன்னாள் பா/ மன்ற உறுப்பினர்), சகாதேவசங்கரி (மக்கள் வங்கி, யாழ் பிரதானவீதி), மதியாபரணம், பரதசங்கரி (U K), லோகநாயகி, திருநல்நாயகி, துருவசங்கரி, காலஞ் சென்ற கணேசசங்கரி, ஞானசங்கரி, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரரும் கனகநாயகி, சற்குணவதி, கமலநேத்ரா (யாழ் இந்து மகளிர் ஆசிரியை), ஞானசம்பந்தர், இரத்தினம் (ஆசிரியர்), கதிர்காமசோதி, ஜெயசீலன், தில்லைநடராசா (நில அளவை திணைக்களம்), பத்மசேனன், மனோகராதேவி ஆகியோரின் மைத்துனரும், மகாதேவா (இ. மி. சபை)வின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-10-1988 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 -00 மணியளவில் சாவகச்சேரி, கண்ணுடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்

தகவல்,-
சகாதேவசங்கரி

சாவகச்சேரி. (7488)

### சிவலிங்கம் விஜயரத்தினம்

கொழும்பு புறக்கோட்டை 2 ஆம் குறுக்குத் தெரு ராஜா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும். கரம்பன் ஐந்தாம் புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானியம்பதி மானிப்பாய் வாசியுமாகிய சிவலிங்கம் விஜயரத்தினம் 26-10 88 இரவு காலமாகிவிட்டார்.

இவர் கொழும்பு புறக்கோட்டை 2 ஆம் குறுக்குத் தெரு ராஜா ஸ்ரோர்ஸ் காலம் சென்ற பொ. சிவலிங்கம், காலம் சென்ற லீலாவதியினது மூத்த மகனும் காலம் சென்ற மானியம்பதி மானிப்பாய் கந்தையா செல்வநாயகம், (முன்னாள் பட்டின சபைத் தலைவரும். பிரபல கட்டட ஒப்பந்தக்காரரும்) மகேஸ்வரியினது அன்பு மருமகனும்

பத்மினியின் அன்புக் கணவரும், விஜேந்தினி, ஜெயந்தினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்) செந்தூரன் (மானிப்பாய் சோதி வேம்படி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். சிவரத்தினம், சரோஜா (லண்டன்) பாலேந்திரா (ஜேர்மனி) சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அளவெட்டி சிவபாலனின் (லண்டன்) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 29-10-88 சனிக்கிழமை முற்பகல் 11 00 மணிக்கு மானியம்பதி மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இத் தகவலை ஏற்றுககொள்ளவும்

தகவல்:-

(7571) செல்வநாயகம் பாலச்சந்திரன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28- 10- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed andPublished by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 28th October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org